019210

<u>சுருக்கம்</u>

கல்லூரிக்கல்வி – 2018–2019ஆம் கல்வியாண்டிற்கான சமூகப்பணி (M.A.Social Work/ M.S.W.) பட்ட மேற்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான வழிகாட்டு நெறிமுறைகள் – வெளியிடப்படுகின்றன.

---

உயர்கல்வி (டி1)த் துறை

அரசாணை (1டி) எண். 142

நாள் 30.04.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
விளம்பி, சித்திரை – 17
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (1D) எண். 134, உயர்கல்வி (டி1) துறை, நாள்.7.7.2010.
2. அரசாணை (1D) எண். 110, உயர்கல்வி (டி1) துறை, நாள்.23.6.2011.
3. அரசாணை (1D) எண். 100, உயர்கல்வி (டி1) துறை, நாள்.3.5.2012.
4. அரசாணை (1D) எண். 106, உயர்கல்வி (டி1) துறை, நாள்.17.6.2013.
5. அரசாணை (1D) எண். 97, உயர்கல்வி (டி1) துறை, நாள்.28.5.2014.
6. அரசாணை (1D) எண். 153, உயர்கல்வி (டி1) துறை, நாள்.19.6.2015.
7. அரசாணை (1D) எண். 201, உயர்கல்வி (டி1) துறை, நாள்.06.06.2016.
8. அரசாணை (1D) எண். 113, உயர்கல்வி (டி1) துறை, நாள்.17.04.2017.
9. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.993/எம்1/2018, நாள். 02.03.2018.

---------

ஆணை:

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2010–2011–ஆம் கல்வியாண்டிற்கு, சமூகப்பணி பட்ட மேற்படிப்பில் மாணவர் சேர்க்கை தொடர்பாக புதிய வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. அவ்வழிகாட்டி நெறிமுறைகளையே 2011–12, 2012–13 மற்றும் 2013–14ஆம் கல்வியாண்டுகளில் பின்பற்றுவதற்கு முறையே மேலே இரண்டு முதல் நான்கு வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டன. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2014–2015ஆம் கல்வியாண்டிற்கு, சமூகப் பணி பட்ட மேற்படிப்பிற்கு (M.A. Social Work) மாணவர் சேர்க்கை தொடர்பாக திருத்திய வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2015–2016–ஆம் கல்வியாண்டிற்கு, சமூகப் பணி பட்ட மேற்படிப்பிற்கு (M.A. Social Work) மாணவர் சேர்க்கை தொடர்பாக திருத்திய வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டன. மேலே ஏழாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2016–2017–ஆம் கல்வியாண்டிற்கான சமூகப்பணி பட்ட மேற்படிப்பிற்கு (M.A. Social Work) மாணவர் சேர்க்கை தொடர்பாக வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலே எட்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2017–2018–ஆம் கல்வியாண்டில் அரசு / அரசு உதவி பெறும் / சுயநிதி கல்லூரிகளில் சமூகப் பணி பட்ட மேற்படிப்பிற்கு (M.A. Social Work) மாணவர் சேர்க்கை தொடர்பாக வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே ஒன்பதாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் 2018–2019 ஆம் கல்வியாண்டிற்கான சமூகப்பணி (M.A. Social Work/ M.S.W.) பட்ட மேற்படிப்பிற்கு மாணவர் சேர்க்கை வழிகாட்டி நெறிமுறைகளுக்கான வரைவினை அரசுக்கு அனுப்புவதற்கேதுவாக கல்லூரிக்கல்வி இயக்குநர் அவர்களின் தலைமையில் இணை இயக்குநர் (திட்டம் மற்றும் வளர்ச்சி), உதவி இயக்குநர் (சுயநிதிக் கல்லூரிகள்) மற்றும் முதல்வர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டது என்றும், நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்கள் அனைவரும் வருகை புரிந்து, மாணவர் சேர்க்கை வழிகாட்டி நெறிமுறைகளை விவாதித்து 2017–18ஆம் கல்வியாண்டில் வழங்கப்பட்ட மாணவர் சேர்க்கை வழிகாட்டி நெறிமுறைகளில் திருத்தங்கள் மேற்கொண்டு 2018–2019–ஆம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கைக்கு பின்பற்றலாம் என பரிந்துரைக்கப்பட்டன என்றும், அதனடிப்படையில், 2018–2019ஆம் கல்வியாண்டிற்கு சமூகப்பணி (M.A. Social Work/ M.S.W.) பட்ட மேற்படிப்பு உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் மாணவர் சேர்க்கை வழிகாட்டி நெறிமுறைகளில் உரிய திருத்தங்களுடன் ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கல்லூரிக்கல்வி இயக்குநர் அவர்களின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்கலாம் என முடிவு செய்து அவ்வாறே 2018–19–ஆம் கல்வியாண்டிற்கு சமூகப் பணி (M.A. Social Work/ M.S.W.) பட்ட மேற்படிப்பு உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் மாணவர் சேர்க்கை தொடர்பாக இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள திருத்திய வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனில் பாலீவால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
நகல்
உயர்கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –09.
உயர்கல்வித் துறை முதன்மைச் செயலரின் தனிச் செயலர், சென்னை–9.
இ.கோ./உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

2/5/18
பிரிவு அலுவலர்

30/05/18

## இணைப்பு

## அரசாணை (1டி) எண்.142, உயர்கல்வி (டி1)த்துறை, நாள் 30.04.2018

## சமூகப்பணி (M.A. Social Work/ M.S.W.) பட்ட மேற்படிப்பு உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் பின்பற்றப்பட வேண்டிய 2018–2019 ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள்

### தகுதி

அங்கீகாரம் பெற்ற எந்தவொரு பல்கலைக்கழகத்தின் பட்டதாரி எவரும் இப்படிப்பில் சேரத் தகுதி உடையவராவர். அவர் 10+2+3 முறையில் பயின்றவராக இருத்தல் வேண்டும். பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கான விதித் தளர்வுகளுக்கு உட்பட்டு, தமிழில் நடைமுறை அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

### வகுப்புவாரி இட ஒதுக்கீடு

வகுப்புவாரி இட ஒதுக்கீடு தொடர்பாக தமிழ்நாடு அரசு அவ்வப்போது வரையறுக்கும் விதிகள் பின்பற்றப்பட வேண்டும். அதாவது, ஆதிதிராவிடர்களுக்கு 18 விழுக்காடு இடங்கள், பழங்குடியினத்தவருக்கு 1 விழுக்காடு இடங்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினருக்கு 20 விழுக்காடு இடங்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 30 விழுக்காடு இடங்கள், பொதுவான போட்டிக்கு 31 விழுக்காடு இடங்கள் என்ற அடிப்படையில், மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். மானியம் பெறும் சிறுபான்மையினர் சாரா கல்லூரிகளைப் பொறுத்தவரை, 90 விழுக்காடு இடங்களுக்கும், மானியம் பெறும் சிறுபான்மையினர் கல்லூரிகளைப் பொறுத்தவரை 50 விழுக்காடு இடங்களுக்கும் வகுப்புவாரி இட ஒதுக்கீடு விதிகள் பொருந்தும். சம்பந்தப்பட்ட மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரிடமிருந்து நேரடியாக சம்பளம் பட்டுவாடா பெறும் கல்லூரிகளைப் பொறுத்தவரை, நிருவாகத்தினருக்கான ஒதுக்கீடு எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது. அத்தகைய கல்லூரிகளில், அனைத்து இடங்களுமே, வகுப்புவாரி இட ஒதுக்கீட்டின் விதியின்படி நிரப்பப்பட வேண்டும். மானியம் பெறாத தனியார் கல்லூரிகளைப் (சுயநிதி கல்லூரிகள்) பொறுத்தவரை 50 விழுக்காடு இடங்களுக்கு வகுப்புவாரி இட ஒதுக்கீடு விதி பொருந்தும். ஆதிதிராவிடர் வகுப்பு இட ஒதுக்கீட்டில் அருந்ததியினருக்கு 3 % உள் ஒதுக்கீடு அளிக்க வேண்டும். பிற்படுத்தப்பட்ட வகுப்பினரிடையே உள்ள 30% இட ஒதுக்கீட்டில் முஸ்லீம்களுக்கு 3.5 % உள் ஒதுக்கீடு அளிக்க வேண்டும்.

### மாணவர் தெரிவு முறை

நேர்காணல் மற்றும் எழுத்துத் தேர்வு மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். எழுத்துத் தேர்வுக்கான வினாக்கள் கொள்குறி வகையினதாக (objective type) இருத்தல் வேண்டும். மதிப்பெண்கள் கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்பட வேண்டும்:–

| | | |
|---|---|---|
| தகுதித் தேர்வு மதிப்பெண் | – | 100 |
| எழுத்துத் தேர்வு மதிப்பெண் | – | 50 |
| நேர்காணல் | – | 10 |
| குழு கலந்துரையாடல் | – | 5 |
| சிறப்பு மதிப்பெண் NSS/NCC/RRC/YRC | – | 5 |
| BSW | – | 5 |
| மொத்தம் | – | 175 |

பிற மாநில மாணவர்களுக்கு மிகை மதிப்பெண் (weightage mark) எதுவும் அளிக்கப்படக்கூடாது.

தெரிவு நடைமுறையை முடிப்பதற்கான கால அளவு

இப்படிப்பில் சேர்வதற்கான விண்ணப்பம் அக்கல்லூரி சார்ந்த பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள் (அரசு விடுமுறை நாட்கள் நீங்கலாக) கல்லூரிக்கு வந்து சேர வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியலை வெளியிடுதல்

விண்ணப்பங்கள் வந்து சேர்வதற்கான கடைசி நாளிலிருந்து 10 நாட்களுக்குள் (அரசு விடுமுறை நாட்கள் நீங்கலாக) தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல் வெளியிடப்பட வேண்டும்.

சேர்க்கைக் குழு

சேர்க்கைக்குழு, கல்லூரியின் முதல்வர் மற்றும் அக்கல்லூரியில் பணிபுரியும் இரண்டு மூத்த இணை / உதவிப் பேராசிரியர்கள் கொண்டதாகும். அதனுடன், கல்லூரியில் எஸ்.சி / எஸ்.டி வகுப்பைச் சார்ந்த மூத்த பேராசிரியரும் சேர்க்கைக் குழுவில் இடம் பெறுவார்.

மாணவர் சேர்க்கைக்கான நெறிமுறைகள்

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ள மாணவர் சேர்க்கை தொடர்பான ஏனைய நடைமுறை இப்படிப்புக்கும் பொருந்தும்.

சுனீல் பாலீவால்
அரசு முதன்மைச் செயலாளர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

தி. சிரேஷ்குமார் 2/5/18
பிரிவு அலுவலர்

2/05/18